# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## SC.No. 15/2024

| | | | |
|---|---|---|---|
| அ.சா . | : 1 | நாள் | : 27.03.2025 |
| பெயர் | : சரஸ்வதி | தொழில் | : |
| தந்தை பெயர்/ | : | சமயம் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலுகா | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 27th day of March 2025.

எதிரிகள் ஆஜர்.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சிவகிரியில் குடியிருந்து வருகிறேன். இறந்துபோன சாட்சி வேலு என் கணவர். எனக்கு ஒரு மகனும், இரண்டு மகளும் உள்ளார்கள். நாங்கள் விவசாயம் செய்து வருவதால் நிலத்தை குத்தகைக்கு எடுத்து வேலை செய்கிறோம். 09.01.2014 ம் தேதி என் மகன் இறந்துபோனார். நான் வீட்டிலிருந்தபோது வயலுக்கு உரம் போடுவதற்கு சென்ற என் மகன் சுப்பிரமணியன் வீடு திரும்பவில்லை என்று நானும், என் கணவரும், சாட்சி கணேசன் ஆகியோர் என் மகனை பார்பதற்கு வயலுக்கு சென்றோம். அங்கு சென்றபோது என் மகன் ஆஜர் எதிரி கணேசன் வயலில் நெல் பயிர் சிதைந்த நிலையில் கிடந்தது அதன் அருகிலேயே அவர்

கொண்டு சென்ற உரப்பையும், அவர் அணிந்திருந்த துண்டும் கிடந்தது. நான் வயலிருந்து திரும்பி வரும்போது எதிரிகள் இருவரிடமும் என் மகனை பார்த்தீர்களா என்று கேட்டேன். அவர்கள் இல்லை என்று சொன்னார்கள். என் மகனை காணவில்லை என்று நான் காவல் நிலையத்திற்கு சென்று தகவல் சொன்ன பின்னர் அவர்கள் காலை 11 மணிக்கு மேல் வந்து பார்த்தபோது ராஜன் என்பவரது கரும்பு வயலில் என் மகன் சடலத்தைபோட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது. அவர் உடலில் கரிப்பிடித்திருந்தது. என் மகனை சிவகிரி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். என் கணவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்.

**முதல்விசாரணை வேண்டுகோளின்பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.03.27 17:55:13 +0530